**JAMAL MOHAMED COLLEGE(Autonomous)**
**TIRUCHIRAPPALLI 620 020**

**Department of Visual Communication**
**B.Sc., Visual Communication**

# Animation

Story with Animation Movies கதையும் அனிமேசனும்

# Story with Animation Movies
# கதையும் அனிமேசனும்

**முனைவர். இரகுநாதன், உதவி பேராசிரியர்**
**Dr. Ragunathan, Assistant Professor**



**கதைகள்**

கதை சொல்லல் என்பது மனிதர்கள் தங்களுக்குள் நடந்த நிகழ்வுகளை கற்பனை வடிவில் மற்றவரிடம் சொல்லுவது முறையே ஒரு கனவு மற்றும் நிகழ்ச்சி அல்லது ஒரு தொடர்புடைய பாதிக்கப்பட்ட நிகழ்ச்சி, நெகிழ்ச்சி இறந்த கால நிகழ்வுகளை கொண்டிருப்பது கதைகள் உருவாகும் தளங்கள் என்று சொல்லலாம்.

கதைகள் மனிதர்கள் கண்டுபிடித்த பொற்களஞ்சியம். ஒரு கதை சொல்லி தன்னுடைய சொல்லின் வலிமையால் கற்பனைகலை கலந்து கேட்பவரின் மனதில் புதிய கருத்தை கற்பனை உலகத்தையே உருவாக்குகிறார் என்று கூறலாம். இங்கு வார்த்தைகள்தான் ஊடகம் இதன் மூலம் கதை ஆழமாக விளக்க ப்படுகின்றது. வார்த்தைகளினால் ஒரு உலகத்தை உருவாக்கி அதை அப்படியே புரிந்து கொள்ளும் படி கேட்பவருகு புரிந்தது கொள்ளும் வண்ணம் கவனத்துடன் இருக்க வேண்டும். மேலும் கேட்பவருக்கும் சிறிது கற்பனைத் திறனும் இருக்க வேண்டும் என்பது முக்கியம் . மனிதனின் மூளையில் ஒளியின் ஆதிக்கம் மிக அதிகம் தெரிந்திருப்போம் ஏன்னென்றால் மனிதன் மூளை வளர்ச்சியடைய இந்த கதையும் முக்கிய பங்கு உள்ளது என்று சொல்லலாம் எனவே காலப்போக்கில் கதை சொல்லலில் புதிய முறைகள் மற்றும் நவீன முறைகளும் புகுத்தப்பட்டன. நாடகங்கள், கூத்துகள் மூலம் கதைகள் வெகுஜனங்களைச் சென்றடைந்தன.

**கதையும் சினிமாவும்**

சினிமா வளர இந்த கதையும் முக்கியம் அவற்றில் நிஜ மனிதர்கள் கதையின் பாத்திரமேற்று கதையும் அவர்களின் கதாபாத்திரங்களின் குணங்கள் அவர்களை தங்களுக்குள் புகுத்தி நடிப்பர். இதன் வளர்ச்சியே இன்று சினிமாவாக உருவெடுத்துள்ளது. ஒருபுறம் நிஜ மனிதர்களைக் கொண்டு கதை சொல்வது ஒரு இயல்பாகவே அரங்கேறியது.

**கதை, பொம்மலாட்டம், தோல்பாவைக் கூத்து**

இதில் முக்கியம் என்னவென்றால் உயிறற்ற பொம்மைகள் படைக்கப்பட்டு அவை கதை சொல்லியாலோ அல்லது அவரின் குழுவினாலோ இயக்கப்பட்டது. பொம்மலாட்டம், தோல்பாவைக் கூத்து இவைகள் கதையை ஒலி, ஒளி வடிவிலும் கொண்டு சேர்க்கின்றன. இதன் மூலம் உயிறற்ற பொம்மைகளை இயக்கி ஓர் உயிரோட்டமிக்க கதையை சொல்வது சாத்தியபடுத்தி காட்டியது கதை. இதில் அந்தக் கலைஞனின் திறமை மிகவும் முக்கியம். மேலும் அந்த பொம்மைகளும், அதன் பின்புலங்களும் கதைக்கு முக்கிய பங்கு என்று தெரிகின்றது.

**கதை ஓவியம் புகைப்படம்**

ஓவியர்களின் கைவண்ணமும் முயற்சிகளும், புகைப்படக் கலையின் கண்டுபிடிப்புகளும் ஒன்றிணைந்து இது சாத்தியம் என்று காட்டியது . இன்று நாம் காணும் அனிமேஷன் படங்கள். இருபதாம் நூற்றாண்டுக்கு வெகு முன்னரே சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், அவை கதை சொல்வதற்கு முக்கியத்துவம் காட்டப்படவில்லை . மாறாக ஓவியர்கள் நகரக்கூடிய உயிர்ச்சித்திரங்களை உருவாக்கவே முன்வந்தனர். அப்படியே ஒரு கலை வடிவமாக பல்வேறு பரிணாமங்கள் பெற்று வளர்ச்சி பெற்றன.

**கதையும் அனிமேசனும்**

மனிதர்களும் , பொருட்களும் கதாபாத்திரங்கள் கொண்டு உருவாக்கப் பட்டத் திரைப்படங்கள் ஓர் கதையினை உயிர் தந்து அனிமேஷன் கதையை முன்னிருத்தியது . அனிமேஷனிலேயே சித்திரங்கள் உயிரற்றவையாக இருந்ததை அப்படியே உயிர் கொடுத்து உருவாக்கினார். பல தரப்பப்பட்ட கலைஞர்களின் உதவியுடன் ஒரு புது உலகத்தையே உருவாக்கியது. அனைத்து பொருளுக்கும் உயிர் கொடுக்கப்பட்டது. ஒரு வாகனங்கள் கூட மனிதனைப் போல ஓடும் விளையாடும் பேசும் பல்வேறு மொழிகளையும் பேசும் வண்ணம் உருவாக்கினார். Animation என்ற வார்த்தைக்கு உயிரூட்டுதல் என்று அர்த்தம். எனவே அவற்றை நாம் தமிழில் உயிருட்டப்பட்ட சித்திரங்கள் அல்லது உயிர்ச்சித்திரங்கள் என அழைக்கின் றோம்.

**அனிமேஷன் திரைப்படங்களும்**

அனிமேஷன் திரைப்படங்களை உங்கள் குழந்தைகளுடன் அமர்ந்து பாருங்கள் அதன் பின்பு தான் தெரியும் நாம் வாழ்வில் அனுபவிக்கும் தருணங்கள் எது என்றெல்லாம் புரியும். என்னை பொறுத்த மட்டில் அனிமேஷன் திரைப்படங்களின் பங்கு நம் குழந்தைகள் சமுகத்தில் அதிக சித்தனை மற்றும் கற்பனை திறன்களையும் கொண்டு வருகின்றது என்று கூறமுடியும் அவர்களின் மனதில் நல்ல

கருத்துக்களைப் பதிய வைத்தது போன்றும் இருக்கும் அதே நேரத்தில் அவர்களுக்குள் ஒரு புதிய கதாப்பாத்திரங்கள் மற்றும் இயற்கை வளங்கள் ஆகியவை எவ்வாறு இருக்கும் அதை எப்படியெல்லம் கண்டு மகிழ்கின்றனர். அதை எப்படி அவர்கள் மொழியில் புரிந்துகொள்கின்றனர் என்றும் தெரிந்து கொள்ளலாம்.

**முனைவர். இரகுநாதன், உதவி பேராசிரியர்**
Dr. Ragunathan, Assistant Professor